மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 139 /2014

4,23 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.3.

---

பெயர். – திருமதி.வித்தியாதேவி
க/பெ. – திரு.காளிராஜ்
கிராமம் – கொக்காடி
தொழில் – இல்லத்தரசி
தாலுகா – கடலாடி
வயது – 31.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u>–

1) நான் இந்த வழக்கில் 24 ம்பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 19.08.1996 அன்று பிராது தபசில் 5 ம்அயிட்ட சொத்தைப்பொறுத்து வெங்கடசாமி நாயக்கர் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரால் சண்முகவேல் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பதிவுக்கிரைய ஆவணம் 5 தாள்கள் அசல் பி.வா.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 24.01.2001 அன்று பிராது தபசில் 5 ம்அயிட்டச்சொத்தைப்பொறுத்து சண்முகவேல் என்பவரால் கோவில்பட்டி சார்பதிவக ஆவண எண்.1149/2001 ன் மூலம் 5 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டபதிவுக்கிரைய ஆவணம் அசல் 7 தாள்கள் பி.வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | பிராது தபசில் தனது அயிட்டச்சொத்தைப்பொறுத்து 5 ம்பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட 2149 எண் கொண்ட கணினி பட்டா நகல் பி.வா.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 04.08.2011 மற்றும் 15.04.2021 ஆகிய தேதிகளில் பிராது தபசில் 5 ம் அயிட்டச்சொத்திற்கான பட்டா எண்.2149 க்கு 5 ம்பிரதிவாதி செலுத்தியுள்ள தீர்வை ரசீதுகள் எண்ணம் 2 பி.வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 28.10.2025 தேதியில் பிராது தபசில் 5 ம்அயிட்ட சொத்திற்கான பட்டா எண்.2149 க்கு 5 ம்பிரதிவாதி பெயரில் செலுத்தியுள்ள தீர்வை ரசீது அசல் பி.வா.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராது தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
27.04.2026.